
பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 22 வியாழக்கிழமை 07.08.2025 | அதிர்வு 07

## யானை தாக்கி ஒருவர் மரணம்

### வவுனியாவில் துயரம்



(வவுனியா நிருபர்)

வவுனியா, பெரியதம் பனை பகுதியில் யானை தாக்கி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது


இங்கே CLICK செய்யவும்

# சுயாதீன ஊடகவியலாளர் குமணன் ரி.ஐ.டியால் விசாரணைக்கு அழைப்பு

சுயாதீன ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை குமணனைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு விசாரணைக்கு அழைத்துள்ளது.

சுயாதீன ஊடகவியலாளர் குமணன் காணாமல்போனோரின் உறவுகளின் போராட்டங்கள், நில அபகரிப்பு மற்றும் செம்மணி மனிதப் புதைகுழி போன்ற செய்திகளைத் தொடர்ச்சியாகக் களத்தில் நின்று வெளியிட்டு வருபவர். இந்நிலையில், அவரைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு விசாரணைக்காக அழைத்துள்ளது.

02▶



# பொருளாதார நெருக்கடி இங்கு மீண்டும் ஏற்படாது!



## இடைக்கால ஜனாதிபதி ஒருவர் வரவே மாட்டார்; சபையில் எதிர்க்கட்சிகளுக்கு அநுர நெத்தியடி

"இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படும், மீண்டும் நெருக்கடி ஏற்படும் என்ற கனவை எதிர்க்கட்சிகள் மறந்து விட வேண்டும். இது எமது ஆட்சி. இடைக்கால ஜனாதிபதி ஒருவர் வரவே மாட்டார். எனவே, மாற்று வழியில் அரசியல் செய்யுங்கள் என்று எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன்."

02▶

# புலிகளின் கொலைப்பட்டியலில்கூட மஹிந்தவின் பெயர் இருக்கவில்லை

## அவரின் பாதுகாப்பு குறைக்கப்பட வேண்டும் என்று பொன்சேகா வலியுறுத்து

"விடுதலைப்புலிகளின் கொலைப் பட்டியலில்கூட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயர் இருக்கவில்லை. புலிகள் என் மீதே தாக்குதல் நடத்தினார்கள். மஹிந்தஷவுக்குத் தற்போது வழங்கப்பட்டிருக்கும் 60 பேர் கொண்ட பாதுகாப்பு ஏற்பாடானது மிக



அதிகம். அவரின் பாதுகாப்புப் படையணியை 30 பேரைக் கொண்டதாகக் குறைக்க வேண்டும்."

– இவ்வாறு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

02▶





# செம்மணியில் பச்சிளம் குழந்தையின் என்புத்தொகுதி!

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து பச்சிளம் குழந்தையின் என்புத்தொகுதியொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குழந்தையின் என்புத்தொகுதி உடையும் நிலையில் மிகப் பலவீனமாக இருந்ததால், என்புத் தொகுதியைச் சுற்றியிருந்த மணல் பிடிமானங்களுடன் இணைந்த வகையில் சுற்றிக் கட்டப்பட்டு, அது பத்திரமாக மீட்கப்பட்டது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பொருளாதார...

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் இன்று வியாழக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

“சர்வதேச நாணய நிதியத்தின் வரைவுக்கமைய பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும்.

அமெரிக்க பரஸ்பர தீர்வை வரி விவகாரத்தில் எவ்வித இறுதி ஒப்பந்தங்களும் இதுவரையில் கைச்சாத்திடப்படவில்லை. இது தொடர்பில் விரிவான பேச்சில் ஈடுபட்டுள்ளோம்.” – என்றார்.

### புலிகளின்...

“மஹிந்தவுக்கு பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் கூறுகின்றனர். ஆனால், அவருக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புக்கூட மிகவும் அதிகம் என்றே நான் கூறுவேன். பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கத் தலைமைத்துவம் வழங்கினார் என்பதற்காக மஹிந்த மீது புலிகள் ஒருபோதும் தாக்குதல் நடத்தவில்லை. தாக்குதல் நடத்துவதற்கு முயற்சியும் எடுக்கவில்லை. புலிகளின் கொலைப்பட்டியலில்கூட மஹிந்தவின் பெயர் இருக்கவில்லை.

புலிகள் என் மீதே தாக்குதல் நடத்தினார்கள். போர் தொடங்கும் முன்பே என் மீது தாக்குதல் நடத்தினர். மஹிந்த வைத்திருந்த பாதுகாப்பு பிரிவில் அரைவாசிப் பேர் மனைவி கடைக்குச் செல்லும்போது பாதுகாப்பு வழங்குவதற்கும், பிள்ளைகள் விளையாடுவதற்கு பாதுகாப்பு வழங்குவதற்குமே பயன்படுத்தப்பட்டனர். இது வெறும் பகட்டு. பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாமல் எதற்கு மஹிந்தவுக்கு இத்தனை பாதுகாப்பு.

நன்கு பயிற்சி வழங்கப்பட்ட 30 பேர் மஹிந்தவின் பாதுகாப்புக்குப் போதும். நான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தால், 30 பேரைத்தான் பாதுகாப்புக்கு வழங்குவேன். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அமைச்சர்களுக்கு பாதுகாப்பில்லை. அவர்கள் மக்களோடு மக்களாக திரிகிறார்கள். அப்படியொரு நிலைமை எமது நாட்டிலும் வர வேண்டும்.” – என்றார்.

### யானை தாக்கி...

இந்தத் துயரச் சம்பவம் நேற்று புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வீதியால் பயணித்த நபர் மீதே யானை தாக்கியுள்ளது.

சம்பவத்தில் கிடாப்பிடிச்சகுளம், நட்டாங்கண்டலை வதிவிடமாகக் கொண்ட சண்முகராசா உதயராசா என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

### சுயாதீன...

பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் குமணனுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில், வாக்குமூலமொன்றைப் பதிவு செய்வதற்காக ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி காலை 10 மணிக்கு முல்லைத்தீவு, அளம்பில் பொலிஸ் நிலையத்தில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



# வள்ளி மணாளன் மஞ்சத்தில் வருகிறான்!

## இன்று நல்லூரான் மஞ்சம்



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

வள்ளி மணாளன் மஞ்சத்தில் வருகிறான்
உள்ளம் உருகிட திருமுறை ஒலிக்குது
கள்ளம் களைய கந்தன் வருகின்றான்
மெள்ளவே மஞ்சம் வீதியிலே வருகுது!

மஞ்சம் பார்க்க வந்திடு மடியவர்
தஞ்சம் என்றே எண்ணியே வருகிறார்
நெஞ்சம் நிறைய நிம்மதி தருவான்
கந்தக் கடவுள் என்றே குவிகிறார் !

வாடிய பயிரென நின்றிடு மடியார்
வாட்டம் போக்கிட மஞ்சத்தில் வருகிறான்
நாடிடும் அடியார் கூடியே குவிகிறார்
வேலவன் மஞ்சம் மெள்ளவே வருகுது!

மஞ்சம் பார்த்திட மங்கையர் வருகிறார்
தம்பிகள் தங்கைகள் கூடவே இணைகிறார்
அப்பாவும் அம்மாவும் அரோகரா என்கிறார்
அரனார் மைந்தன் மஞ்சத்தில் வருகிறார்!

காளையர் கன்னியர் கந்தனின் மஞ்சத்தை
காதலில் கரைந்து கைகூப்பி நிற்கிறார்
வாழ்வினில் வசந்தம் வந்திட அவரும்
வேலவன் அருளை வேண்டியே நிற்கிறார்!

வீதிகள் எங்கணும் அடியவர் வெள்ளம்
வேலவன் மஞ்சம் மெள்ளமாய் வருகுது
பேதங்கள் அனைத்தும் பறந்துமே போக
பெரும் பொருளாகி முருகனே தெரிகிறான்!



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரசின் எதிர்காலம்

முன்னைய ஆட்சிக் காலத்தில் ஊழல்கள், மோசடிகள், முறைகேடுகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் போன்றவற்றைக் கண்டுபிடித்து, அவற்றை இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை வாங்கிக் கொடுப்போம் என்று கூறி அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி, இப்போது அதன் ஆட்சி காலம் ஓர் ஆண்டு நிறைவை நோக்கி நகர்கையில் இவ்விகாரத்தில் சில முன்நகர்வுகளை மேற்கொண்டு இருக்கின்றது.

கடந்த ஆறு மாத காலத்தில் அரசியல்வாதிகள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் என 63 பேர் லஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தினால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்ற தகவலைப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

அந்த அறிவிப்பு வெளியான அதே காலத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவருமான சசிந்தர ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கிறார். அறகலய போராட்டத்தை அடுத்து நாசமாக்கப்பட்ட பிறிதொருவரின் சொத்தை தன்னுடைய சொத்தாகக் காட்டி, அரசிடம் நஷ்டஈடு பெற்றுள்ளார் என இவர் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது.

இந்த விடயங்களைக் கையாளும் லஞ்ச, ஊழல் விசாரணை ஆணையம் சுயாதீனமாகச் செயல்படுகின்றது என்றும் அதில் அரசாங்கத்தினால் செல்வாக்குச் செலுத்த முடியாது என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் கருத்துக் கூறி, பொதுமக்களை நம்ப வைக்க முயற்சி எடுத்தார் எனினும், அந்தக் கூற்று எவ்வளவு தூரம் நம்பிக்கைக்குரியது என்பது மக்கள் மத்தியில் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இந்த விடயத்தில் அரசாங்கம் தெளிவாகவும், அரசியல் பழிவாங்கும் இலக்கு இல்லாமலும், நேர்மையாகவும், முறையாகவும், சரியாகவும் செயல்படாவிட்டால் இந்த விவகாரமே இந்த ஆட்சி பீடத்திற்கு எதிரான பூமராங்காகத் திரும்பி வரும் என்பதை ஆட்சியாளர்கள் மறந்து விடக்கூடாது. அதுதான் 2015 இல் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசுக்கும் ஏற்பட்டது. அதிலிருந்து சரியான படிப்பினையை இந்த அரசு கற்றுக் கொண்டதா என்பதுதான் கேள்வி.

நல்லாட்சி அரசு அதிகாரத்துக்கு வந்த கையோடு இதே போல பல அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். பலர் விளக்கமறியலிலும் சிறையிலும் மாதக்கணக்காகக் காலம் கழித்தார்கள். ஆனால் லஞ்சம், ஊழல், முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகம் போன்றவை தொடர்பாக தண்டனைகள் சரியாக வாங்கிக் கொடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக பிணைமுறி ஊழல் போன்ற பெரும் முறைகேடுகள்தான் அச்சமயம் அரங்கேறின - இப்போதைய அரசாங்கம் சர்ச்சைக்குரிய பொருள்கள அடங்கிய 323 கொள்கலன்களை எந்தவிதச் சுங்கச் சோதனையும் இன்றி பின் கதவால் விடுவித்தமை போன்ற ஊழல் தான் அப்போதும் இடம்பெற்றது.

அப்போதைய அரசின் அந்த அணுகுமுறை என்ன விளைவை தந்தது? 2015இல் மக்களால் துரத்தி அடிக்கப்பட்டவர்கள் மீண்டும் 2018 அதீத செல்வாக்கோடு மக்கள் மத்தியில் எழுச்சியுறவே அந்த நடவடிக்கைகள் - அணுகுமுறைகள் - வழி செய்தன.

அதனை முன்னுதாரணமாக கொண்டு தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு பாடம் படித்துக் கொள்ள வேண்டும். அதே தவறை - நல்லாட்சி அரசு செய்த அதே தவறை - இந்தத் தேசிய மக்கள் சக்தியும் முன்னெடுக்குமானால் நல்லாட்சி தரப்பினர் அரசியல் குப்பை கூடைக்குள் தூக்கி வீசப்பட்டமை போன்ற நிலைமைதான் இந்த ஆட்சியாளர்களுக்கும் ஏற்படும்.

முன்னைய ஆட்சித் தரப்பில் முன்னெடுக்கப்பட்ட ஊழல், மோசடிகள், முறைகேடுகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் போன்றவை தொடர்பில் கனகாத்திரமான, உண்மையை அம்பலப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை இந்த அரசு முன்னெடுக்கத் தவறினால் இதன் எதிர்காலமும் நல்லாட்சி அரசின் போக்கிலேயே போய் முடியும் என்பது திண்ணம்.

# நல்லூர் பிரதேச சபையினரால் 'கிளீன் ஸ்ரீலங்கா' விழிப்புணர்வு

நல்லூர் பிரதேச சபையினர் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி நிதியம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வை ஆலய சுற்றுப்புறத்தில் நடத்தினர்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் இது முன்னெடுக்கப்பட்டது.







# கிழக்கு மாகாண றக்பி போட்டியில் வென்றது திரியாய் தமிழ் வித்தி.

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான றக்பி போட்டியில், திரியாய் தமிழ் மகா வித்தியாலய 20 வயதுக்கு உட்பட்ட பெண்கள் அணி வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டது.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான றக்பி போட்டி கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டி நிகழ்வில் திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட 20 வயது பெண்கள் அணி கிழக்கு மாகாண மட்டத்தில் வெற்றி பெற்றுத் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.



தரம் இரண்டு வகுதிக்குரியதும்,150 மாணவ, மாணவிகளைக் கொண்டுள்ளதுமான, அதிகஷ்டப் பிரதேசத்தில் இயங்கும் இந்தப் பாடசாலை இவ்வாறு வெற்றி பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மாநகர சபையால் நிலுவைகள் அறவிடும் பணி!



(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாநகர சபையால் கடந்த வருட நிலுவைகளை அறவிடும் பணிகள் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் தலைமையில் நேற்று புதன்கிழமை (06) ஆரம்பமாகியது.

கடந்த வருடங்களில் மாநகர சபையின் 20 வட்டாரங்களில் செலுத்த வேண்டிய வரிப் பணம் 90 மில்லியன் நிலுவையுள்ளது. இதனால் அவற்றை மாநகர சபை உத்தியோகத்தர்கள் ஐந்து குழுவாக பிரித்து அறவிடவுள்ளனர்.

கடந்த வருடங்களான 2022, 2023, 2024 ஆண்டுகளில் மட்டும் 62 மில்லியன் நிலுவை அறவிடாது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மக்களின் வசதி கருதி, மக்கள் வீடுகளுக்குச் சென்று நிலுவைகளை அறவிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது மாநகர சபையால் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள், திண்மக்கழிவு முகாமைத்துவம், வீதி அமைத்தல், மின் விளக்குகளை பொருத்துதல், பாதிக்கப்பட்ட வீதிகளை செப்பனிடுதல் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநகரசபை எல்லைப் பகுதியினுள் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தைத் தவிர்ப்பதற்கு எதிராக மாடுகள் வளப்பவர்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வீதியோர வியாபாரத்தைத் தடுப்பதற்குத் தேவையான ஆலோசனைகயையும் வழங்கி வருகின்றார்.

இந்த நிகழ்வில் பிரதி முதல்வர் வை. தினேஸ்குமார், மாநகர சபையின் ஆணையாளர் என்.தனஞ்செயன், கணக்காளர்கள், நிர்வாக உத்தியோகத்தர் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# விசேட தேவையுள்ளோருக்கான தேசிய மட்ட கலாசார நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

சமூக சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய ஜனாதிபதியின் பங்குபற்றுதலுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய கலாசார நிகழ்வு நெலும்புக்கன மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வானது திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமாரவின் வழிகாட்டலுக்கமைவாக இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளும் இதில் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் ஒன்பது மாகாணங்களில் முதலாம் இடத்தை பெற்ற அணிகள் மற்றும் இலங்கையில் உள்ள 13 தொழில் பயிற்சி நிலையங்களும் கலந்து கொண்டன.







# கடலரிப்பால் காவு கொள்ளப்படும் திருக்கோவில் கரையோரம்!

## இல்மனைட் அகழ்வு இடம்பெற்றால் பாதிப்பு இரட்டிப்பாகும்

**(வடிவேல் டினேஸ்)**

இல்மனைட் மற்றும் கடலரிப்பு தொடர்பாக கடந்த காலங்களில் பேசு பொருளாக காணப்பட்ட பிரதேசமாக திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவு விளங்குகின்றது.

தேசத்து ஆலயம் என்று போற்றப்படும் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் முகப்பு பகுதியை அண்டிய பகுதிகளில் கடந்த காலங்களை விட மிகவும் அதிகரித்த கடலரிப்பு இடம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கடலரிப்பால் மக்களது நிலங்கள், பெறுமதியான தென்னை மரங்கள், நன்னீர் கிணறுகள், என்பன காவு வாங்கப்பட்டுள்ளன. தற்போது அதிகரித்த கடலரிப்பால் திருக்கோவில் கரையோரத்தில் காணப்படும் மீனவர் கட்டடமும் காவு கொள்ளப்படும் அபாய நிலையில் காணப்படுகிக்றது.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த திருக்கோவில் பிரதேச சபைத் தவிசாளர் சுந்தரலிங்கம் சசிகுமார்,

திருக்கோவில் பிரதேசத்தின் கடலரிப்பு விடயம் தொடர்பாக அம்பாறை மாவட்ட அரச அதிபருடன் கலந்துரையாடியுள்ளோம். இது தொடர்பான நடடிக்கை விரைவாக மேற்கொள்ளப்பட்டு கடலரிப்பைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

திருக்கோவில் பிரதேச சபையின் இரண்டாவது சபை அமர்வின் தீர்மானத்துக்கு அமைவாகத் திருக்கோவில் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இல்மனைட் அகழ்வுக்குத் தடை விதித்துத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்த தீர்மானத்தை அரச வர்த்தமானியில் பிரசுரிக்க கிழக்கு மாகாண ஆளுனரின் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இல்மனைட் அகழ்வு இடம்பெற்றால் கரையோரப் பிரதேசங்கள் தற்போது காணப்டும் கடரிப்பு நிலையானது இரட்டிப்பகும். இதனைத் தடுக்க விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.– என்றார்.



# சாவகச்சேரி நகர சபை உறுப்பினரால் பாடசாலைக்குக் குப்பை வாளிகள் வழங்கல்

சாவகச்சேரி நகர சபை உறுப்பினரும், நகர சபையின் சுகாதாரக் குழுத் தலைவருமாகிய வரேந்திரன் பிரகாஸ் தனது முதலாவது மாத சம்பளத்தில் கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி குப்பை வாளிகளைக் கொள்வனவு செய்து வழங்கியள்ளார்.

தென்மராட்சி சமூக மேம்பாட்டு அமையம் ஊடாக இவற்றை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.



# வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சுவிஸ் உதயத்தின் உதவிகள்





(எம்.ஏ.றமீஸ்)

மூதூர் பிரதேசத்தில் பல்வேறு அடிப்படை வசதிகள் குறைவாக காணப்படும் முன்னம் போடிவெட்டை கிராமத்தில் உள்ள வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களின் நலன் கருதி சுவிஸ் உதயம் அமைப்பின் மூலம் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

உதவிப் பொருள்களை மாணவர்களுக்குக் கையளிக்கும் நிகழ்வு இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

சுவிஸ் உதயம் அமைப்பின் இலங்கைக்கான தலைவர் எம்.விமலநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைப்பின் பொருளாளரும், பிரபல தொழிலதிபருமான கே.துரைநாயகம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான உதவிப் பொருள்களைக் கையளித்தார்.



மூதூர் முன்னம்போடிவெட்டை பிரதேசத்தில் நீண்ட காலமாக பல்வேறு அசௌகரியங்களுடன் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் நலன் கருதி அப்பிரதேசத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடன் இலவச பிரத்தியேக வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் இன்மையால் மாணவர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வந்தனர். இந்த நிலையில் சுவிஸ் உதயம் அமைப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வுதவிகள் அந்த மாணவர்களுக்காகவழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின்போது இலங்கைக்கான சுவிஸ் உதயம் அமைப்பின் செயலாளர் பாவாணர் அக்கரைப்பாக்கியன், பொருளாளர் எம்.கருஸ்ராஜ், உப செயலாளர் நடனசபேசன், முன்னம்போடிவெட்டை கிராம கல்வி நிலையப் பொறுப்பாளர் என்.பூங்கொடி, முன்னம்போடிவெட்டை கிராம கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் வி.செல்வராஜ், செயலாளர் கே.பிரதீப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை ஆலயங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தின் உதவிகள்





திருகோணமலை, கிண்ணியா பிரிவில் அமைந்துள்ள உப்பாறு சித்தி விநாயகர் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஆலய புனருத்தாரணப் பணிக்காக நிர்வாகத்தினரிடம் ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

திருகோணமலை, திரியாய் பிரிவில் அமைந்துள்ள கல்லம்பத்தை தஞ்சை விநாயகர் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஆலய புனருத்தாரணப் பணிக்காக நிர்வாகத்தினரிடம் 2 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

திருகோணமலை, பூம்புகார் கிழக்கு பிரிவில் அமைந்துள்ள பாலையூற்று ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஆலய புனருத்தாரணப் பணிக்காக நிர்வாகத்தினரிடம் ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று உதவிகளை வழங்கியதுடன் கள ஆய்வுகளையும் மேற்கொண்டார்.

# பால்நிலை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு

பச்சிலைப்பள்ளி, இத்தாவில் தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபை அலுவலகத்தில் பால்நிலை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று (06) நடைபெற்றது.

நிகழ்வில் வளவாளராக பிரதேச பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கலந்து கொண்டார். நிகழ்வில் 22 மாணவர்கள் பங்கு பற்றினர்.





# கல்முனை ஆதார வைத்தியசாலையின் உன்னத செயற்பாடுகளுக்குப் பேராதரவு!

## வழங்கத் தயார் என்கின்றனர் சமூக பிரதிநிதிகள் பணிப்பாளருடனான சந்திப்பில் தெரிவிப்பு





**( வி.ரி.சகாதேவராஜா)**

கல்முனை ஆதார வைத்தியசாலையின் உன்னத செயற்பாடுகளுக்குச் சமூகப் பிரதிநிதிகள் பேராதரவு வழங்கத் தயாராக உள்ளனர் என்று வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் குணசிங்கம் சுகுணனுடனான சந்திப்பில் சமூக செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையில் நடைபெற்ற சந்திப்பில் உதவிப் பணிப்பாளர் மருத்துவர் சா.இராஜேந்திரன், கணக்காளர் எம்.கேந்திரமூர்த்தி, தாதிய பரிபாலகர் அ.சசிகரன், நிர்வாக உத்தியோகத்தர் அருள் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

“சமூகத்தின் பார்வையில் வைத்தியசாலை” என்ற தொனிப்பொருளுக்கு அமைவாக, கல்முனைப் பிராந்திய சமூகம் சார்பாக சட்டத்தரணி அருள் நிதான்சன் தலைமையில், சமூக செயற்பாட்டாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

வைத்தியசாலையின் இன்றைய நிலை, அது எதிர்நோக்கும் சவால்கள், குறைநிறைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

குழுவினர் சார்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

வைத்தியசாலை சார்ந்த எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் நீண்ட கால திட்டங்கள் என்பவற்றின் வெற்றிக்குத் தோளோடு தோள் நின்று பூரண ஒத்துழைப்பு வழங்கவுள்ளோம். எமது பங்களிப்பை சகல வழிகளிலும் மக்கள் சார்பாக வழங்குவதற்கு முன்வருவோம்.– என்றார்.

அத்துடன் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுக்கான வினைத்திறன் நிறைந்த சேவைகளை வழங்கும் பணிப்பாளரை வாழ்த்திப் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

# சாய்ந்தமருதில் இரவு நேர பொலிஸ் ரோந்து! பொலிஸ் பொறுப்பதிகாரி சம்சுதீன் தெரிவிப்பு





**( வி.ரி.சகாதேவராஜா)**

இனிமேல் சாய்ந்தமருது பிரதேசத்தில் குறிப்பாக கடற்கரை மற்றும் பிரதான வீதிகளில் இரவு நேர பொலீஸ் ரோந்து மேற்கொள்ளப்படும் என்று சாய்ந்தமருது பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் வர்த்தக சங்கத்தினரிடம் உறுதியளித்தார்.

சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக நலன்புரி சங்கத்தின் விசேட கூட்டம் நேற்று (6)இரவு கல்முனை மையோன் பிளாஷா விடுதியில் இடம்பெற்றது .

சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக நலன்புரி சங்கத்தின் தலைவர், பிரபல தொழிலதிபர் எம். எஸ் .எம் .முபாரக் ஹாஜியார் தலைமையில் குறித்த கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் டாக்டர் எம் ஐ .அமீர் புர்கான், சங்க செயலாளர் எம்.எம். உஸ்மான், பொருளாளர் எம் .எம். ஆசாத் ரஹீம் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

அங்கு தலைவர் முபாரக் கூறுகையில், “சாய்ந்தமருதில் ஒரு வர்த்தக நிலையத்தில் திருட்டு இடம்பெற்றிருக்கின்றது. இதனைக் கண்டுபிடித்து, வர்த்தகர்கள் நிம்மதியாகப் பாதுகாப்பாக வியாபாரம் செய்ய பொலிஸார் துரிதமாக நடவடிக்க வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்.

அதற்குப் பதில் அளிக்கும் விதமாக சாய்ந்தமருது பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் இரவுநேர ரோந்து பற்றி கூறினார்.

அங்கு பொலிஸ் பொறுப்பதிகாரி சம்சுதீன் மேலும் தெரிவிக்கையில்,

சாய்ந்தமருது பிரதேசத்தில் 28 ஆயிரத்துக்கு மேற்பட்ட சனத்தொகை உள்ளது. ஆனால் எமது பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் உத்தியோகஸ்தர்கள் பற்றாக்குறை காரணமாக உரிய பாதுகாப்பைப் பூரணமாக வழங்க முடியாத சூழ் நிலை காணப்படுகிறது . எனினும் முடியுமான அளவு பாதுகாப்பை வழங்குகின்றோம். உத்தியோகத்தர்களை விஸ்தரிப்பது அவசியம்.

இனிவரும் காலங்களில் பிரதான வீதிகளிலும் கடற்கரை வீதியிலும் இரவு நேரங்களில் பொலிஸ் ரோந்து இடம்பெறும்.– என்றார்.

அங்கு டாக்டர் அமீர் புர்கான் பேசுகையில்,

வர்த்தகர்கள் நேரத்துக்கு உணவெடுப்பது குறைவு. அது கூடாது. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம். எனவே ஆரோக்கிய உணவு உரிய நேரத்துக்குச் சாப்பிடல் வேண்டும். மேலும் உடல் பயிற்சி கட்டாயம் செய்ய வேண்டும். உரிய நேரத்துக்கு உறக்கம் அவசியம். உள்ளத்தைச் சந்தோசமாக வைத்துக் கொள்ளவேண்டும்.– என்றார்.

வர்த்தகர் சங்க உறுப்பினர்கள் சுமார் 50 பேர்வரை இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



# பல்லவகுளம் பண்டைய குடியேற்ற துறைமுகப் பகுதியில் அகழ்வாராய்ச்சி

(எஸ்.கீதபொன்கலன்)

தொல்பொருள் மண்டல எண் 1 ஐச் சேர்ந்த ரிதிகந்த தொல்பொருள் பிரதேசத்தில் உள்ளதும், குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள பல்லவகுளம் பண்டைய குடியேற்றத்துடன் கூடிய புராதன துறைமுகம் இருந்தது என கருதப்படும் பகுதியில் கடந்த நான்கு தினங்களாக, அகழ்வாராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன எடின்று தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அகழ்வாராய்ச்சிச் செயற்பாடுகள் தொடர்ந்து இந்த மாதம் முழுவதும் தொடரும் எனவும் தெரிய வருகின்றது.

இதுவரை ஆராயப்படாத இலங்கையின் பண்டைய மனிதக் குடியேற்றத்தின் தனித்துவமான தொல்பொருள் தளமாக இது கருதப்படுகிறது.

அரச வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தொல்பொருள் பிரதேசமாக அடையாளம் இடப்பட்டுள்ள இந்தப் பகுதியில், மட்பாண்டங்களின் துண்டுகள், களிமண் மற்றும் தாதுக்களால் செய்யப்பட்ட மணிகள் வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்ததாக நம்பப்படும் இரும்பு ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தொல்பொருள் துறையின் திருகோணமலை மாவட்ட உதவி இயக்குநர் டபிள்யூ.யு. சுரங்க பெரேரா கூறினார்.

இங்கு பண்டைய மனிதர்கள் புதைக்கப்பட்ட மெகாலிதிக் கல்லறைகள் சில இடங்களில் காணப்படுகின்றன. இலங்கையில் உள்ள பெருங்கற்கால கல்லறைகளில் இருந்து இந்தக் கல்லறைகளை வேறுபடுத்துவது யாதெனில், அவை வட்ட வடிவில் வட்டக் கற்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படுகின்றன என்றும், பண்டைய மனித குடியிருப்புகளை ஆராயும் போது செவ்வக வடிவ பெருங்கற்கால கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும், வட்ட வடிவ கல்லறைகள் கண்டுபிடிக்கப்படுவது இது இரண்டாவது அல்லது மூன்றாவது முறையாகும் என்றும் உதவி இயக்குநர் இது தொடர்பில் கூறினார்.

ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் துறையின் பேராசிரியர் டி. துசிதா மெண்டிஸ், களனி பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் துறையின் பேராசிரியர் மங்கள கட்டுகம்பள மற்றும் தொல்பொருள் முதுகலை நிறுவனத்தின் மூத்த விரிவுரையாளர் ரஞ்சித் பண்டார ஆகியோரின் நிபுணத்துவ உதவியுடன் அகழ்வாராய்ச்சி பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்றும் மாவட்ட தொல் பொருள் உதவி இயக்குநர் மேலும் தெரிவித்தார்.





# சென்னையில் தூய்மைப் பணியாளர்கள் 7 வது நாளாக வேலைநிறுத்த போராட்டம்

## தேங்கியுள்ள குப்பைகள்

சென்னை மாநகராட்சி துப்புரவு பணிகளை, தனியாருக்கு வழங்கியதற்கு எதிப்பு தெரிவித்து, துப்புரவு பணியாளர்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த 7 நாள்களாக துப்புரவு பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால், சென்னையின் பல இடங்களில் குப்பைகள் தேங்கி துர்நாற்றம் வீசி வருவதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சென்னை மாநகராட்சியில் தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க.நகர் ஆகிய மண்டலங்கள் மற்றும் அம்பத்தூர், அண்ணாநகர் மண்டலங்களில் சில வார்டுகள் தவிர மற்ற பகுதிகளில் தூய்மைப்பணி தனியாரிடம் விடப்பட்டுள்ளது. மேற்கூறிய 5 மண்டலங்களில் மாநகராட்சி நிரந்தரப்பணியாளர்கள் மற்றும் என்.யூ.எல்.எம். திட்டத்தின் கீழ் ஒப்பந்தப் பணியாளர்கள் தூய்மைப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதிகளையும் தனியாரிடம் விட மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் வேலை இழப்பு, ஊதியக் குறைப்பு, பணி பாதுகாப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படும் என்பதால் தனியாருக்கு விடக்கூடாது. தங்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என தூய்மைப் பணியாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இப்பகுதிகளையும் தனியாரிடம் விட மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் வேலை இழப்பு, ஊதியக் குறைப்பு, பணி பாதுகாப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படும் என்பதால் தனியாருக்கு விடக்கூடாது. தங்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என தூய்மைப் பணியாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த 1 ஆம் திகதி முதல் உழைப்போர் உரிமை இயக்கத்தைச் சேர்ந்த தூய்மைப் பணியாளர்கள், 'தூய்மைப் பணியில் தனியாரை அனுமதிக்க கூடாது. பணி நிரந்தரம் செய்ய வேண்டும்' என வலியுறுத்தி ரிப்பன் மாளிகை முன்பு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு, பணி புறக்கணிப்பும் செய்து வருகின்றனர்.

இதனால் ராயபுரம், மேயர் ஆர்.பிரியாவின் வார்டு இடம்பெற்றுள்ள திரு.வி.க.நகர் மண்டலம் ஆகியவற்றில் 6 நாள்களாக குப்பைகள் அகற்றப்படாததால், வீதிகளில் குப்பை குவிந்து துர்நாற்றம் வீசுகிறது.


இந்நிலையில், உழைப்போர் உரிமை இயக்க நிர்வாகிகளை அழைத்து, அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா முன்னிலையில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துவிட்டு, மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறோம் என்று அமைச்சர் நேரு கூறியதாக உழைப்போர் உரிமை இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, எங்கள் கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என தூய்மைப் பணியாளர்கள் அறிவித்துள்ளனர்.







# உத்தராகண்டில் பெருவெள்ளம், நிலச்சரிவு; கேரள பயணிகள் 28 பேரை காணவில்லை

உத்தராகண்டில் மேகவெடிப்பால் பெருவெள்ளம் ஏற்பட்ட பேரிடரை தொடர்ந்து இதுவரை சுமார் 150 பேர் மீட்கப்பட்டுள்ளனர். கேரளாவை சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் 28 பேரை காணவில்லை.

உத்தராகண்ட் மாநிலத்தில் கடந்த சில வாரங்களாக கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில் உத்தரகாசி மாவட்டம், இமயமலைப் பகுதியில் நேற்று முன்தினம் மேகவெடிப்பால் திடீர் பெருவெள்ளம் ஏற்பட்டது.

சார்தாம் யாத்திரை தலங்களில் ஒன்றான கங்கோத்ரி அருகில் இந்தப் பெருவெள்ளம் ஏற்பட்டதில் இக்கோயிலுக்கு செல்லும் வழியில் உள்ள தராளி என்ற கிராமம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

இந்த கிராமத்தில் பல ஹோட்டல்கள், தங்கும் விடுதிகள் செயல்பட்டு வந்தன. மேலும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இங்கு வசித்து வந்தனர். இந்நிலையில் பெருவெள்ளத்தில் 5 பேர் உயிரிழந்த நிலையில் பலர் படுகாயம் அடைந்தனர். மேலும் ஏராளமானோரை காணவில்லை. இதையடுத்து அங்கு மீட்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன.

உத்தராகண்டில் கின்னார் - கைலாஷ் யாத்திரை பாதையில் 413 பக்தர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என இந்தோ-திபெத் எல்லை காவல் படை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் உத்தராகண்ட் பெருவெள்ளம் மற்றும் கடும் நிலச்சரிவுக்கு பிறகு கேரளாவை சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் 28 பேரை காணவில்லை என உறவினர்கள் தெரிவித்தனர். இந்த 28 பேரில் 20 பேர் மகாராஷ்டிராவில் குடியேறியவர்கள். மற்றவர்கள் கேரளாவின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என கூறப்படுகிறது.

இதுகுறித்து கொச்சியில் உறவினர் ஒருவர் கூறுகையில்,

“இவர்கள் 28 பேரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் உத்தரகாசியில் இருந்து கங்கோத்ரிக்கு புறப்பட்டனர். அவர்கள் செல்லும் வழியில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. பிறகு அவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை. 10 நாள் உத்தராகண்ட் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்த ஹரித்வார் பயண நிறுவனத்தாலும் இவர்களின் இருப்பிடம் குறித்து எந்த தகவலும் அளிக்க முடியவில்லை” என்று கூறினார்.

# சூதாட்ட செயலி விளம்பர விவகாரம்: விஜய் தேவரகொண்டாவிடம் விசாரணை



மொபைல் சூதாட்ட செயலி விளம்பரங்களில் நடித்ததாக நடிகர் பிரகாஷ் ராஜ், விஜய் தேவரகொண்டா, ராணா, நடிகை பிரணீதா, மஞ்சு லட்சுமி உட்பட 29 பிரமுகர்களிடம் அமலாக்கத் துறை விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியது.

இது தொடர்பாக சமீபத்தில் நடிகர் பிரகாஷ் ராஜ் விசாரணைக்கு நேரில் ஆஜராகி இருந்தார். இவரை தொடர்ந்து நேற்று இதே வழக்கு தொடர்பாக நடிகர் விஜய் தேவரகொண்டா விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம், விளம்பரத்தில் நடித்ததற்காக பெறப்பட்ட ஊதியம் எவ்வளவு? யார் கொடுத்தார்கள்? என கேட்கப்பட்டது. மேலும் அவரின் வங்கிக் கணக்கு விவரங்களையும் கேட்டதாக தெரியவந்துள்ளது.

இவரை தொடர்ந்து இம்மாதம் 11 ஆம் திகதி நடிகர் ராணாவும், 13 ஆம் திகதி நடிகர் மோகன்பாபுவின் மகளான மஞ்சு லட்சுமியும் விசாரணைக்கு ஆஜராக உள்ளனர்.

# இந்தியாவுக்கு எதிராக போரை தொடங்கினார் டொனால்ட் ட்ரம்ப்

## அமெரிக்க ஊடகம் தகவல்



சீனாவும், அமெரிக்காவும் பரம எதிரிகளாக உள்ளன. இதனால் சீனாவை சமாளிக்க அதன் அண்டை நாடாக உள்ள இந்தியாவை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆதரிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் யாரும் எதிர்பாராத வகையில் சீனாவை விட அதிகமாக இந்தியாவுக்கு 50 சதவீதம் வரை வரி விதித்துள்ளார் ட்ரம்ப் . இதன்மூலம் ஜனநாயக நாடுகளான இந்தியாவுக்கும் , அமெரிக்காவுக்கும் இடையே மோதல் உள்ளது.

இதற்கிடையே, ட்ரம்பின் இந்த வரி விதிப்பை இந்தியா மீதான போராக வர்ணித்து அமெரிக்காவின் பிரபல ஊடகமான 'தி நியூயோர்க் டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதால் நம் நாட்டுக்கு ஏற்கனவே டொனால்ட் ட்ரம்ப் 25 சதவீத வரியை கடந்த 1 ஆம் திகதி விதித்தார். தொடர்ந்து ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதாக நேற்று 2 ஆவது கட்டமாக 25 சதவீத விதித்தார் ட்ரம்ப். இதனால் இந்தியா மீது மொத்தம் 50 சதவீத வரியை அமெரிக்கா விதித்துள்ளது.

இதில் முதற்கட்டமாக இன்று முதல் 25 சதவீத வரி அமுலுக்கு வருகிறது. அதன்பிறகு 21 நாள்கள் கழித்து 2 ஆவது கட்டமாக 25 சதவீத வரி செயல்பாட்டுக்கு வரும் என்று ட்ரம்ப் அறிவித்துள்ளார். இது பலருக்கும் அதிர்ச்சியாக அமைந்துள்ளது. அமெரிக்காவின் நல்ல உறவு வைத்துள்ள நாடுகளில் இந்தியா ஒன்றாக உள்ளது.

குறிப்பாக டொனால்ட் ட்ரம்ப் - நரேந்திர மோடி இடையே நல்ல உறவு இருந்து வந்தது. ஆனால் அதையெல்லாம் கடந்து ட்ரம்ப் இப்படி 50 சதவீத வரி போட்டு இருப்பது அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

இந்த நிலையிலேயே,அமெரிக்காவின் பிரபல ஊடகமாக நியூயோர்க் டைம்ஸ் இந்தியா மீதான போரை அமெரிக்கா தொடங்கி உள்ளதாக தெரிவித்துள்ளது.



# சீனாவுக்கு செல்கிறார் இந்திய பிரதமர் மோடி

இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஓகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 1 வரை சீனாவில் உள்ள தியான்ஜினுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்த பயணத்தின் போது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் அவர் பங்கேற்கிறார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு லடாக்கில் கால்வான் பள்ளத்தாக்கில் இந்தியா - சீனா இராணுவ வீரர்கள் மோதிக் கொண்டனர். இதில் இரு தரப்பிலும் உயிரிழப்பு ஏற்பட்டது. இதனால் இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது. தற்போது விரிசல் கொஞ்சம் கொஞ்சமாக சரியாகி வரும் நிலையில், பிரதமர் மோடி சீனா செல்கிறார் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த பயணம் வேறு ஒரு வகையிலும் முக்கியத்துவம் பெற உள்ளதாக பார்க்கப்படுகிறது. அதாவது வரி விஷயத்தில் அமெரிக்காவின் நெருக்கடி இந்தியாவுக்கு அதிகமாக இருக்கிறது. இதனை சமாளிக்க மத்திய அரசு, சீனாவுடன் நெருக்கமான வர்த்தக உறவுகளை ஏற்படுத்த முயற்சிக்கலாம் என பேசப்பட்டு வருகிறது.

எனவே இந்த சந்திப்பில் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடக்கலாம். அந்த வகையில் இந்த பயணம் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

## காலக்கெடு நிறைவடைகின்றது:

# ரஷ்யா - உக்ரைன் ஜனாதிபதிகளை விரைவில் சந்திக்கின்றார் ட்ரம்ப்

ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையிலான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், தாம் குறித்த இரு நாட்டு ஜனாதிபதிகளையும் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதன்படி, அடுத்த வாரத்தின் முதல் பகுதியில் இந்த சந்திப்பு இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனது தூதருக்கும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்தே அவர் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.



எனினும் மேலதிக விபரங்களை டொனால்ட் ட்ரம்ப் வெளியிடவில்லை இந்தநிலையில், விளாடிமீர் புடினுக்கும், டொனால்ட் ட்ரம்பின் பிரதிநிதி ஸ்டீவ் விட்காஃப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் குறித்து கிரெம்ளின் தெளிவற்ற அறிக்கை ஒன்றையே வெளியிட்டுள்ளது.

மொஸ்கோவின் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாக இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டதாக ரஷ்ய வெளியுறவுக் கொள்கை உதவியாளர் ஒருவர் கூறியுள்ளார்.

உக்ரைனில் போர் நிறுத்தத்திற்கு ரஷ்யா ஒப்புக்கொள்ள வேண்டும் அல்லது புதிய தடைகளை எதிர்கொள்ள வேண்டும் என்று டொனால்ட் ட்ரம்ப் விதித்த காலக்கெடு முடிவடையும் நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கனடா முரசு
பக்கம் 03
வியாழக்கிழமை 07/08/2025

## தட்டம்மை நோய் தொடர்பான அந்தஸ்த்தை இழக்கும் கனடா

உலகில் தட்டம்மை நோயை கட்டுப்படுத்திய நாடுகளின் வரிசையில் இடம்பெற்றுள்ள கனடா அந்த அந்தஸ்தினை இழக்கக்கூடிய அபாயம் உருவாகியுள்ளது. 02▶

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"



# தமிழர் தெருவிழா 2025 இரத்து; கனடிய தமிழர் பேரவை அறிவிப்பு

**கனடாவில் ஆண்டுதோறும் நடத்தப்படும் தமிழர் தெருவிழா இம்முறை இரத்துசெய்யப்பட்டுள்ளது என கனடிய தமிழர் பேரவை அறிவித்துள்ளது**

**இதுதொடர்பில் கனடிய தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,**

**"தமிழர் தெருவிழா என்பது கனடிய தமிழர்களின் பெருமையாக ஒரு குறுகிய காலத்திற்குள் வளர்ந்துள்ள உலகின் மிகப்பெரிய தமிழர் திருவிழாவாகும். ஆண்டுதோறும் மிகச்சிறப்பாகவும் பெருமையுடன் நாம் அனைவரும் ஒன்றாக இந்த கோடைத்தெருவிழாவை பல்லின மக்கள் வாழுகின்ற ஒரு தேசத்தில் நிகழ்த்தி வந்துள்ளோம். மிகவும் சில சமூகங்களுக்கே இவ்வாறு பிரதான வீதியொன்றில் தமது கலைகளை, பண்பாட்டை பிரதிபலித்து விழா நடத்த அனுமதி வழுங்கப்படுகின்றது. அந்த வகையில் தமிழர்களுக்கான விழாவாக தமிழர் தெருவிழா காணப்படுகின்றதுடன் இதை சிறப்பாக நடத்த வேண்டிய பொறுப்பு அனைத்து தமிழர்களுக்கும் உண்டு.**

ஆனால், கடந்த ஆண்டு நடைபெற்ற தமிழர் தெருவிழாவின்போது ஏற்பட்ட ஒழுக்கமின்மையான செயற்பாடுகள், பயமுறுத்தல்கள், வன்முறை சம்பவங்கள் காரணமாக இந்த ஆண்டு தமிழர் தெருவிழாவிற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க மாநகர சபையும், பொலிஸ் பிரிவும் கோரியுள்ளன. குறிப்பாக, பொலிஸ் பாதுகாப்பை கடந்த ஆண்டை விட நான்கு மடங்கு அதிகரிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழர் தெருவிழா என்பது ஒரு இலாப நோக்கற்ற தமிழர் விழா ஆகும். கனடாவில் இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கான பொலிஸ் பாதுகாப்பு செலவுகள் ஒருங்கிணைப்பாளர்களால் கட்டணம் செலுத்தப்பட்டு பெறப்படவேண்டியவை. இந்த ஆண்டு கேட்கப்பட்ட பாதுகாப்பு செலவுகள், விழாவிற்காக திட்டமிடப்பட்ட மொத்த செலவுகளில் நான்கில் ஒரு பங்காக காணப்படுகிறது. இது தமிழர் தெருவிழாவை நடத்துவதற்கு தடையாக உள்ளது.

இவ்வாண்டு தமிழர் தெருவிழாவை அமைதியுடனும், ஒற்றுமையுடனும் நடாத்தும் நோக்கில், கடந்த ஆண்டு புறக்கணிப்பை பகிரங்கமாக கோரிய கனடிய தமிழர் தேசிய அவை (National Council of Canadian Tamils - மக்கள் அவை), மற்றும் கனேடிய தமிழர் கூட்டு (Canadian Tamil collective) என்ற குழுவுடனும் கனடிய தமிழர் பேரவை நேரடி சந்திப்புக்கள் மூலமாகவும், மத்தியஸ்தர்களின் ஈடுபாட்டுடனும் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தது.

இதன்போது தமிழர் தெருவிழா தமிழர்களான நமக்கு மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வு என்பதையும், இதனை எமது அடுத்த தலைமுறையினருக்கு இதே பெருமையுடன் கையளிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் கனடிய தமிழர் பேரவை வலியுறுத்தியிருந்தது. இந்த ஆண்டு தமிழர் தெருவிழாவை சிறப்பாக நடத்தவும் சென்ற ஆண்டைப்போல எந்த வன்முறைக்கும் இடமளிக்கக் கூடாது என்ற எண்ணத்திலும் புறக்கணிப்பை மீளப்பெற்றுக்கொள்ளுமாறும் குறித்த அமைப்புக்களிடம் கேட்டிருந்தோம். அதற்காக அவர்களது நியாயமான கோரிக்கைகளையும், நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்வதென்று எழுத்து மூலமாக உறுதியளித்திருந்தோம்.

ஆனால் அவர்களின் பிரதான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதாக தெரியப்படுத்தப்பட்ட பின்னரும்; அதற்கும் அப்பால் பல புதிய நியாயமற்ற நிபந்தனைகளை முன்வைத்திருந்தனர். கனடியத் தமிழர் பேரவையின் சுயாதீனத் தீர்மானங்களில் தலையிடும் வகையிலும் ஒரு பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் இறையாண்மையை மீறும் வகையிலும் அவர்களின் புதிய கோரிக்கைகள் அமைந்திருந்தமையை அவர்களுக்கு சுட்டிக்காட்டியிருந்தோம்.

அத்துடன் தமிழர் தெருவிழாவை புறக்கணிக்கும் பகிரங்க அழைப்பினை மீளப் பெறுமாறு நாம் பல தடவைகள் முன்வைத்த கோரிக்கையினை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தவறியதோடு எம்முடனான தொடர்பாடல்களையும் நிறுத்திக் கொண்டனர்.

இவ்வாறான நிலையில் தமிழர் தெருவிழாவை இரத்துச் செய்யும் தீர்மானத்தை நாம் எடுக்க வேண்டிய நிலையை அவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

தமிழர்களாக எமது அடையாளங்களை மிகவும் நாகரீகமான முறையில் இந்த தேசத்தில் நாம் வளர்த்து வந்துள்ளோம். அந்த நிலையில் தமிழர் தெருவிழா போன்ற பிரம்மாண்டமான தமிழர்களின் நிகழ்ச்சியொன்றில் வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டுவிட்டாலோ, ஒழுக்கமற்ற, அடிப்படை அறம் தவறிய செயற்பாடுகள் இடம்பெற்றாலோ அது ஒரு சமூகமாக எம் அனைவருக்குமே இழுக்காக அமையும்.

பல மொழிகளை பேசுகின்ற, பல நாடுகளை சேர்ந்த, பல்லின மக்கள் வாழ்கின்ற கனடிய மண்ணில் நமக்குள் இருக்கும் கருத்து முரண்பாடுகளை ஒழுக்கமற்ற முறையில் 02▶

# கனடா எல்லையில் சிக்கிய லொறிக்குள் 44 புலம்பெயர்வோர்; மூன்று பேர் கைது




கனடா அமெரிக்க எல்லைக்கருகில் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்த எல்லை பாதுகாப்பு பொலிஸார், ட்ரக் ஒன்றிற்குள் 44 வெளிநாட்டவர்கள் அடைத்துவைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.20 மணியளவில், கியூபெக்கில், கனடா அமெரிக்க எல்லைக்கருகில் அமைந்துள்ள Stanstead நகரில் ட்ரக் ஒன்றை எல்லை பாதுகாப்பு பொலிஸார் மடக்கி பிடித்துள்ளனர்.

அப்போது, அந்த ட்ரக்குக்குள் 44 வெளிநாட்டவர்கள், நெருக்கியடித்துக்கொண்டு அமர்ந்திருப்பதை பொலிஸார் கண்டுள்ளனர்.

சிறுபிள்ளைகளோ, உட்காரக்கூட இடமில்லாமல் நின்றுகொண்டிருக்க, அவர்களிடையே ஒரு கர்ப்பிணியும் மூச்சுவிடக்கூட முடியாமல் திணறிக்கொண்டு அமர்ந்திருந்திருக்கிறார். அவர்கள் யாரிடமும் தண்ணீர் போத்தல்கள் கூட இல்லை.

எனினும் அவர்கள் யாருக்கும் எந்த உடல் நல பாதிப்பும் ஏற்படவில்லை. அவர்கள் அனைவரும் புலம்பெயர்தல் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில், அவர்களைக் கடத்திக்கொண்டு வந்ததாக Ogulcan Mersin (வயது 25), Dogan Alakus (வயது 31) மற்றும் Firat Yuksek (வயது 31) என்னும் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீது, புலம்பெயர்தல் மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், குற்றச்செயலில் ஈடுபட ஒருவரை தூண்டுவது மற்றும் உதவுவது, சட்டவிரோதமாக கனடாவுக்குள் ஆட்களைக் கொண்டுவர உதவியது ஆகிய குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## தமிழர் தெருவிழா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவெளியில் வெளிப்படுத்துவதும் தமிழர்களாக எமக்கு ஆரோக்கியமானதல்ல. ஒரு சமூகமாக எமது நற்பெயரை காக்கும் நோக்கிலும், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாநகரசபை விதித்துள்ள நிபந்தனைகளை உணர்ந்தவாறும், இந்த ஆண்டு தமிழர் தெருவிழாவை இரத்து செய்யும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதை மிகவும் வருத்தத்துடன்தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது தீர்மானத்தினால் எமது சமூகத்தில் பலத்த ஏமாற்றம் உருவாகலாம் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். இந்த முடிவு மிகவும் சிந்தித்து பல தரப்பட்ட ஆலோசனைகளுக்கு பிறகே எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். தமிழர்களாகிய நாம் உயர்வாக பார்க்கப்பட்ட இடத்தில் தாழ்ந்து நிற்கும் நிலையை தவிர்க்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தமிழர் தெருவிழா தமிழர்களுக்கு மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வு என்பதை தெரிந்திருந்தும், சென்ற ஆண்டின் புறக்கணிப்பு பிரசாரங்களால் பொது வெளியில் வன்முறைகளும், குழப்பங்களும் ஏற்பட்டிருந்ததை அறிந்திருந்தும் இந்த ஆண்டும் அதே செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்களே தமிழர் தெருவிழாவை இந்த ஆண்டு இரத்துசெய்ததற்கான முழுமையான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எங்களுக்கு இத்தனை ஆண்டுகளாக ஆதரவு நல்கிய அனைத்து தமிழ் உறவுகளுக்கும், தன்னார்வ தொண்டர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், கலைஞர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது

## தட்டம்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைய நாள்களாக கனடாவில் தட்டம்மை நோய் பரவுகை தொடர்பிலான பல்வேறு தகவல்கள் பதிவாகியுள்ளன.

கடந்த ஆண்டில் நியூபிரவுன்ஸ்விக் பகுதியில் முதலில் தட்டம்மை நோயாளி பதிவாகியிருந்த நிலையில், அதனைத் தொடர்ந்து பல்வேறு நோயாளிகள் பதிவாகியிருந்தனர்.

தட்டம்மை நோயை இல்லாதொழித்த நாடுகளின் வரிசையில் கனடா 1998 ஆம் ஆண்டு இடம்பிடித்திருந்தது.

கடந்த 2024 ஆம் ஆண்டுக்கு முன்னதாக வருடாந்தம் சராசரியாக 91 பேர் தட்டம்மை நோயினால் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

எனினும் கடந்த ஆண்டு முதல் தட்டம்மை நோயத் தொற்றாளர் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரிப்பினை பதிவு செய்து வருகின்றது.

குறிப்பாக கடந்த ஆண்டு முதல் இதுவரையில் சுமார் 4394 பேர் தட்டம்மை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வைரஸ் தொற்று பரவுகையினால் பலர் பாதிக்கப்பட்டனர் எனவும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.






# காணி அபகரிப்பு குற்றச்சாட்டு; மூவர் பிணையில் செல்ல மறுப்பு

கனடாவில் தீவிரவாத குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட மூன்று பேருக்கு அந்நாட்டு நீதிமன்றம் பிணை வழங்க மறுப்பு வெளியிட்டுள்ளது.

மேற்படி சந்தேக நபர்கள் கியூபெக்கில் பலவந்தமாக காணிகளை கைப்பற்றியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

24 வயதான சிமோன் என்ஜர்ஸ் அடெட், 25 வயதான ராபெல் லாஜெஸ் மற்றும் 24 வயதான மார்க் அருலி ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதி அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் காணிகளை சட்டவிரோத கைப்பற்ற முயற்சித்தனர் எனவும், சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் வைத்திருந்தனர் எனவும் தீவிரவாத செயற்பாடுகளில் ஈடுபட முயற்சித்தனர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நான்காவது சந்தேக நபர் ஒருவருக்கு மட்டும் கடுமையான நிபந்தனை அடிப்படையில் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# கனடாவில் பிஸ்தா, பிஸ்தா கலந்த உணவுகள் தொடர்பில் எச்சரிக்கை

கனடாவில் பல்வேறு பண்டக் குறிகளைக் கொண்ட பிஸ்தாக்கள் மற்றும் பிஸ்தா கலந்த பொருள்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இந்த உணவுப் பண்டங்களை உட்கொண்டதால், சால்மோனெல்லா தொற்றால் பாதிக்கப்பட்டு 9 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கனடிய சுகாதார திணைக்களம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது. நோய்த் தாக்கத்திற்கு பாதிக்கப்பட்டவர்கள் எந்தெந்த மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர் என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை.




நாடு முழுவதும் இந்த பாதிக்கப்பட்ட பொருள்களால் 52 பேர் நோய்வாய்ப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மனிடோபாவில் ஒருவரும் பிரிட்டிஷ் கொலம்பியாவில் 2 பேரும் ஒன்டாரியோவில் 9 பேரும் கியூபெக்கில் 39 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் மூன்றில் நான்கு பங்கு பெண்கள் எனவும் நோயாளிகளின் வயது 2 முதல் 89 வரையிலானர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட பொருள்கள் ஒன்டாரியோ மற்றும் கியூபெக் மாகாணங்களில் ஹபீபி, அல் மொக்தார் உணவு மையம் மற்றும் துபாய் ஆகிய பண்டக்குறிகளின் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சால்மோனெல்லா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தால் மருத்துவர்களின் உதவியை நாடுமாறு கனடிய பொதுச் சுகாதார திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.